**பயன்பாட்டுக்கான விதிமுறைகள்**

*Disclaimer: In the event of any discrepancy or conflict in the translated version, the English version will prevail over the translation.*

இந்த ஒப்பந்தமானது இந்தியச் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்ட, பைசாபஜார் மார்க்கெடிங் அண்டு கன்சல்டன்சி பிரைவேட் லிமிடெட் (இனிமேல் ஒட்டுமொத்தமாக “நிறுவனம்”/”பைசாபஜார்” என்று குறிப்பிடப்படும்) "www.paisabazaar.com" மற்றும் அதன் கைப்பேசி செயலி (ஒட்டுமொத்தமாக ”இணையதளம்” என்று குறிப்பிடப்படுவது) ஆகியவற்றின் அணுகல் மற்றும் பயன்பாட்டுக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை முன்வைக்கிறது. இந்த ஆவணம்/ஒப்பந்தம் (“ஒப்பந்தம்” என்று குறிப்பிடப்படுவது), தகவல்தொழில் நுட்பச் சட்டம், 2000இன் அடிப்படையில் ஒரு மின்னனு பதிவேடு ஆகும் மற்றும் ஒரு கணிணி மூலம் உருவாக்கப்பட்டது என்பதுடன், கையெழுத்திடுவதோ, டிஜிட்டல் கையெழுத்தோ எதுவும் தேவையில்லை. இந்த ஆவணமானது இந்த இணையதளத்தைப் பயன்படுத்துவதில் செலுத்தவேண்டிய உரிய கவனத்தை வழங்கும், தகவல்தொழில்நுட்ப (இடைத்தரகர் வழிகாட்டல்கள்) 2011ன் விதி 3ன் பிரிவுகளின்படி பிரசுரிக்கப்பட்டுள்ளது,

இந்த இணையதளத்தை அணுகுவது அல்லது இந்த இணையதளத்தில் உங்கள் தகவல்களைப் பதிவுசெய்வதன் மூலம், இதன் பயனாளர்கள் (இனிமேல் “நீங்கள்” அல்லது “உங்களுடைய” என்று குறிப்பிடப்படும்) இந்த பயன்பாட்டுக்கான விதிமுறைகளால் ("TOU") கட்டுப்படுத்தப்பட ஒப்புக்கொள்கிறார்கள். தனியுரிமைக் கொள்கையுடன் சேர்ந்து, இந்த ஆவணமானது, உங்களுடனான எங்கள் உறவானது, இந்த இணையதளத்தால் வழங்கப்படும் ஏதாவது குறிப்பிட்ட சேவையின் விதிகள், வழிகாட்டல்கள், கொள்கைகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு உட்பட்டது என்று விளக்குகிறது, மேலும், அவை இந்த TOU உடன் கூட்டிணைக்கப்பட்டதாகக் கருதப்படுவதுடன், இந்த TOUஇன் பகுதியாகக் கருதப்படும்.

TOUஇன் தற்போதைய பதிப்பை மீளாய்வு செய்வதற்காக அவ்வப்போது இந்தப் பக்கத்துக்கு வருவதை உறுதிப்படுத்தவும். எந்த நேரத்தில் வேண்டுமானாலும், எங்களது தனிப்பட்ட விருப்புரிமையின்படி இந்த TOUஐ

முன்னறிவிப்பின்றி மாற்றும் உரிமை எங்களுக்கு உண்டு என்பதுடன், நீங்கள் இந்த இணையதளத்தைத் தொடர்ந்து அணுகுவது அல்லது பயன்படுத்துவது, மேற்சேர்க்கை செய்யப்பட்ட அல்லது திருத்தப்பட்ட TOUஐ நீங்கள் ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும்.

தயவுசெய்து இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் கவனமாகப் படிக்கவும். இங்குள்ள விதிமுறைகளை நீங்கள் ஏற்பது, கீழே வரையறுக்கப்பட்ட நோக்கத்துக்காக உங்களுக்கும், நிறுவனத்துக்கும் இடையில் ஒப்பந்தத்தை உருவாக்குகிறது.

**1. சேவைகளின் விளக்கம் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்**

-

நிறுவனமானது, இதன் மூலம் முதன்மையாக, குறிப்பிட்ட நிதிசார்ந்த தயாரிப்புகள்/சேவைகள் குறித்த தகவல்களுக்கான அணுகுதலை வழங்குகிறது, இது கடன் வசதி, கிரெடிட் கார்டு வசதி, சேமிப்புக் கணக்கு, வைப்பு நிதிகள் மற்றும் பரஸ்பர நிதிகள் (ஒட்டுமொத்தமாக “சேவை/கள்” என்று குறிப்பிடப்படுவது) போன்ற முதலீட்டுச் சேவைகளை உள்ளடக்கும், ஆனால் அது மட்டுமே இல்லை, பரஸ்பர நிதிகள் தொடர்பான முதலீட்டுச் சேவைகளுடன் சேர்த்து, கடன், கிரெடிட் கார்டு வசதி, சேமிப்புக் கணக்கு, வைப்பு நிதிகள் ஆகியவற்றை பைசாபஜார் வழங்குகிறது. கூடுதலாக, நிறுவனமானது கடன் சரிபார்ப்பு சேவைகள் மற்றும் சேவைகளை நீங்கள் தேர்வு செய்வதுடன் இணைந்து, மூன்றாம் தரப்பு தளங்கள் மூலம் உங்கள் தகவல்களை மீட்டெடுத்து, பயன்படுத்துவதற்கான வேறு ஏதாவது சேவைகள் உள்ளிட்ட சேவைகளை (”துணைச் சேவைகள்”) வழங்கலாம், ஆனால் இவை மட்டுமே இல்லை., மேலே கூறப்பட்ட சேவைகள் மற்றும் துணைச் சேவைகள் ஆகியவை வணிகரீதியாக நியாயமான முயற்சியின் அடிப்படையிலும், மேலே கூறப்பட்டுள்ள சேவைகளைப் பெறுவதற்கான உங்கள் பங்கேற்பு முற்றிலும் உங்கள் விருப்பம் மற்றும் ஒப்புதலின் பேரிலானது என்று நீங்கள் ஒப்புக்கொள்ளும்பட்சத்திலும் வழங்கப்படும்.

சேவைகள் மற்றும் துணைச் சேவைகளை நீங்கள் அவ்வப்போது தொடர்ந்து பயன்படுத்துவதும், ஏதாவது மேற்சேர்க்கை அல்லது மாற்றத்தை உள்ளடக்கிய TOUஐ நீங்கள் ஏற்பதைக் குறிப்பதோடு, இங்கு வரையறுக்கப்பட்டுள்ள பிரிவுகளின்படி இந்த ஒப்பந்தம் நிறுத்தப்படும் வரை நீங்கள் இந்த ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்படுவீர்கள்.

இணைந்த சந்தைப்படுத்தல் சேவைகள்/பல்வேறு சேவைகளை வழங்குதல்/அறிக்கைகளை உருவாக்குதல் மற்றும்/அல்லது நீங்கள் தேர்வு செய்த சேவைகள் தொடர்பாக அல்லது வேறுவிதமாக, பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட சேவைகளை உங்களுக்கு வழங்குவதற்காக அதையொத்த சேவைகள் ஆகியவற்றுக்காகத் தேவைப்படும் வரை, அதன் குழு நிறுவனங்கள் மற்றும் பிற மூன்றாம் தரப்பினருக்கு உங்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டு, நிறுவனத்துக்கு அதிகாரமளிக்கிறீர்கள். சேவைகள்/துணைச் சேவைகளின் மேற்சேர்க்கைகள், தகவல்கள்/விளம்பர மின்னஞ்சல்கள் மற்றும்/அல்லது பொருள் அறிவிப்புகளை தொடர்பாக நிறுவனம் அல்லது அதன் மூன்றாம் தரப்பு விற்பனையாளர்கள்/ தொழிற்கூட்டாளிகள்/சந்தைப்படுத்தல் துணை நிறுவனங்களிடமிருந்து மின்னஞ்சல்கள், தொலைபேசி மற்றும்/அல்லது SMS வழியே தகவல்தொடர்புகளைப் பெற நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். இது தொடர்பாக, நீங்கள் வழங்கிய கைப்பேசி எண், TRAI ஒழுங்குமுறைகளின்படி DND/NCPR பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அந்த கைப்பேசி எண்ணிலேயே அனைத்து தகவல்தொடர்புகளையும் பெறுவதற்கு ஒத்துக்கொண்டு, ஒப்புதலளிக்கிறீர்கள். மேலும், அந்த நோக்கத்துக்காக எந்தவொரு மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர் அல்லது துணை நிறுவனம், அதன் குழு நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் ஆகியோருக்கு தகவலை பகிர/வெளிப்படுத்தவும் நீங்கள் நிறுவனத்துக்கு அதிகாரமளிக்கிறீர்கள்.

நிறுவனமானது, எங்களது சட்டபூர்வ கடமைகளுடன் இணங்குவதற்கும், தகராறுகளை தீர்ப்பதற்கும், , சேவைகள் அல்லது மூன்றாம் தரப்பு சேவைகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தகளை அமுல்படுத்துவதற்கும் தேவைப்படுமாறு உங்கள் தகவல்களை தக்கவைக்கும் மற்றும் பயன்படுத்தும்.

**2. உரிமம் மற்றும் இணையதள அணுகல்**

-

சேவைகளில் உள்ளடங்கியுள்ள ஏதாவது அறிவுசார் சொத்துரிமைகள் உள்பட (இந்த உரிமைகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், பதிவு செய்யப்படவில்லை என்றாலும்), சேவைகளிலும், சேவைகளுக்காகவும் அனைத்து சட்டபூர்வ உரிமை மற்றும் அக்கறையும் நிறுவனத்துக்கு உண்டு என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டு, ஒப்புதலளிக்கிறீர்கள். அந்தச் சேவைகள், இரகசியமானது என்று நிறுவனத்தால் குறிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டிருக்கலாம்

என்றும், நிறுவனத்தின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதலின்றி அத்தகைய தகவல்களை நீங்கள் வெளிப்படுத்தக்கூடாது என்பதையும் நீங்கள் மேலும் ஒப்புக்கொள்கிறீர்கள். இணையதளத்தின் "தோற்றம் மற்றும் உணர்வு" (எ.கா உரை, வரைகலை, படங்கள், இலச்சினை மற்றும் பட்ட ஐகான்கள்) புகைப்படங்கள், தலையங்க உள்ளடக்கம், அறிவிப்புகள், மென்பொருள் மற்றும் பிற பொருட்கள் ஆகியவை நிறுவனத்துக்குச் சொந்தமானது நிறுவனத்தால் அதன் மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்கள்/அவர்களின் உரிமதாரர்கள் ஆகியோருக்கு /உரிமம் வழங்கப்பட்டது என்பதுடன், பொருந்தும் காப்புரிமை, வணிகமுத்திரை மற்றும் பிற சட்டங்களின்கீழ் முறையாகப் பாதுகாக்கப்பட்டது.

இந்த இணையதளம், அதன் சேவைகள் மற்றும் துணைச் சேவைகளை அணுகுவதற்கும், பயன்படுத்துவதற்கும், வரையறுக்கப்பட்ட உரிமத்தை நிறுவனம் உங்களுக்கு வழங்குகிறது. இந்த உரிமமானது வேறொரு தனிநபர், விற்பனையாளர் அல்லது வேறு ஏதாவது மூன்றாம் தரப்பினரின் அனுகூலத்துக்காக அல்லது அதிலிருந்து தோன்றிய ஒரு படைப்பை உருவாக்குவதற்காக, திருத்துவதற்காக, திரும்ப உருவாக்குதல், திரும்ப மாட்டுதல் அல்லது ஏதாவது மூலாதாரக் குறியீட்டைக் கண்டுபிடிக்க, விற்பனை செய்ய, ஒதுக்க, துணை உரிமம் வழங்க, பாதுகாப்பு தொடர்பான உரிமம் வழங்க அல்லது சேவைகளில் உள்ள உரிமைகளை ஏதாவது விதத்தில் மாற்றுவதற்கு முயற்சித்தல் ஆகிய நோக்கங்களுக்காக எந்தத் தகவலையும் பதிவிறக்கம் செய்வது அல்லது நகலெடுப்பது ஆகியவற்றை உள்ளடக்காது. அங்கீகரிக்கப்படாத உங்களது எந்தவொரு பயன்பாடும், உங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி அல்லது உரிமத்தை முடிவடையச் செய்துவிடும்.

இந்த இணையதளத்தைப் பயன்படுத்துவது மூலம், நீங்கள் பின்வருவதைச் செய்யாதிருக்க ஒப்புக்கொள்கிறீர்கள்: (i) இந்த இணையதளம் அல்லது அதன் உள்ளடக்கத்தை ஏதாவது வணிக ரீதியான நோக்கத்துக்காகப் பயன்படுத்துவது; (ii) ஊகமான, பொய்யான அல்லது மோசடியான ஏதாவது பரிவர்த்தனை அல்லது தேவையை எதிர்பார்த்து ஏதாவது பரிவர்த்தனையை மேற்கொள்வது; (iii) இந்த இணையதளத்தின் ஏதாவது உள்ளடக்கம் அல்லது தகவல்களை, ஏதாவது ரோபாட், ஸ்பைடர், ஸ்கிராப்பர் அல்லது வேறு தானியங்கு முறை அல்லது ஏதாவது கைச்செயல்முறை மூலம் எங்களது வெளிப்படையான எழுத்துப்பூர்வ அனுமதியின்றி ஏதாவது நோக்கத்துக்காக அணுகுவது, கண்காணிப்பது அல்லது பிரதியெடுப்பது; (iv) இந்த

இணையதளத்தில் உள்ள ஏதாவது ரோபாட் விலக்கு தலைப்புகளில் உள்ள கட்டுப்பாடுகளை மீறுவது அல்லது இந்த இணையதளத்துக்கான அணுகலைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட பிற நடவடிக்கைகளை கடந்துசெல்வது, கட்டுப்படுத்தல் அல்லது புறக்கணித்தல்; (v) எங்களது தன்னறிவின்படி, எங்களது உள்கட்டமைப்பின்மீது நியாயமற்ற அல்லது பொருந்தாத முறையில் மிகப்பெரிய பாரத்தை ஏற்றும் அல்லது ஏற்றக்கூடிய ஏதாவது நடவடிக்கை எடுத்தல்; (vi) எங்களது வெளிப்படையான எழுத்துப்பூர்வ அனுமதியில்லாமல் ஏதாவது நோக்கத்துக்காக இந்த இணையதளத்தின் ஏதாவது பகுதிக்கு ஆழ்ந்த இணைப்பு (வரம்பு எதுவும் இல்லாமல், ஏதாவது சேவைக்கான கொள்முதல் வழி உள்பட); அல்லது (vii) எங்களது முன்கூட்டிய எழுத்துப்பூர்வ அனுமதியில்லாமல் இந்த இணையதளத்தின் எந்தவொரு பகுதியையும் வேறு எந்தவொரு இணையதளத்துக்குள்ளும் ”பொருத்துதல்”, “பிரதிபலித்தல்” அல்லது வேறுவிதமாக ஒருங்கிணைப்பது.

**3. தனியுரிமைக் கொள்கை**

-

இந்த இணையதளத்தைப் பயன்படுத்தல் மூலம், நாங்கள் எங்களுடைய தனியுரிமைக் கொள்கையில் கோடிட்டுக்காட்டியவாறு உங்கள் தகவல்களின் பயன்பாட்டுக்கு நீங்கள் இதன்மூலம் ஒப்புதல் தருகிறீர்கள். இந்தத் தனியுரிமைக் கொள்கையானது, நீங்கள் இந்த இணையதளத்தை அணுகும்போதும், பிற துணைச் சேவைகளைப் பயன்படுத்தும்போது உங்களது தனிப்பட்ட தகவல்களை நிறுவனம் எவ்வாறு கையாள்கிறது என்பதை இந்தத் தனியுரிமைக் கொள்கை விளக்குகிறது.

**4. உங்களது பதிவு/கணக்கு**

-

இந்த இணையதளத்தை நீங்கள் பயன்படுத்துவது மற்றும் எங்களுடன் பதிவு செய்வதைக் கருத்தில்கொண்டு, கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்குச் சட்டபூர்வ வயதுடையவர் என்றும், இந்தியச் சட்டங்கள் அல்லது பொருத்தமான பிற அதிகார வரம்பின்கீழ் சேவைகளைப் பெறுவதைத் தடை செய்யப்பட்ட ஒரு நபர் இல்லை என்றும், உங்களுக்கு அல்லது அவர் சார்பாக நீங்கள் செயல்படுவதற்கு சட்டபூர்வ அனுமதியளிக்கப்பட்ட மற்றொரு நபருக்காக, அவர்கள் சார்பாக நீங்கள் முறையான கொள்முதல்கள் (அதற்குப் பொருந்தும் அனைத்து விதிகள்

மற்றும் கட்டுப்பாடுகள் உள்பட) செய்வதற்காக மட்டுமே இந்த இணையதளத்தைப் பயன்படுத்துவீர்கள் (மற்றும் TOU மற்றும்/அல்லது தனியுரிமைக் கொள்கை குறித்து அந்த நபர்களுக்குத் தெரிவிப்பீர்கள்) என்றும் நீங்கள் கூறுகிறீர்கள்.

இந்தச் சேவையை அணுக உங்களை அனுமதிக்கும் உங்களுடைய கடவுச்சொல்லுடன் சேர்த்து, உங்களுடைய புகுபதிகை அடையாளக்குறியீடு (தேர்வு செய்யப்பட்ட சேவைக்கு ஏற்பப் பொருந்தக்கூடியது) ஆகியவற்றின் இரகசியத்தன்மையைப் பேணுவதற்கு நீங்களே முற்றிலும் பொறுப்பானவர் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு, அதற்கு ஒப்புக்கொள்கிறீர்கள். நீங்கள் வழங்கும் ஏதாவது கைப்பேசி எண் அல்லது பிற தொடர்புத் தகவல்களுடன் சேர்ந்து அந்தப் புகுபதிகை அடையாளக் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவை உங்களுடைய (”பதிவுத் தகவல்கள்”)ஐ உருவாக்கும். உங்களுடைய புகுபதிகை அடையாளக் குறியீடு மற்றும் கடவுச்சொல்லின் ரகசியத் தன்மையைப் பேணுவதற்கும், உங்கள் கணிணிக்கான அணுகுதலைக் கட்டுப்படுத்துவதற்கும் நீங்களே பொறுப்பு என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். உங்கள் கணக்கு அல்லது கடவுச்சொல் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நீங்கள் பொறுப்பேற்க ஒப்புக்கொள்கிறீர்கள். இதன் காரணமாக, ஒவ்வொரு அமர்வின் இறுதியிலும் உங்கள் கணக்கிலிருந்து வெளியேற/விடுபதிகை செய்ய நாங்கள் உறுதியாகப் பரிந்துரைக்கிறோம். உங்களது கணக்கில் ஏதாவது அங்கீகரிக்கப்படாத பயன்பாடு இருந்தால் அல்லது வேறு ஏதாவது பாதுகாப்பு மீறல் இருப்பின், அதுகுறித்து நிறுவனத்துக்கு உடனடியாகத் தெரியப்படுத்த நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். அங்கீகரிக்கப்படாத பயன்பாடு அல்லது அணுகுதல், முற்றிலும் நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்புடைய காரணங்கள் காரணமாக நடந்தது என்று நிரூபிக்கப்படாத வரை, அங்கீகரிக்கப்படாத பயன்பாடு அல்லது அணுகுதலுக்கு நிறுவனம் பொறுப்பாகாது எனவும் நீங்கள் மேலும் ஒப்புக்கொள்கிறீர்கள்.

நீங்கள் உங்களைப் பற்றிய உண்மையான, துல்லியமான, தற்போதைய மற்றும் முழுமையான தகவல்களை வழங்கவேண்டும் என்பதுடன், உங்களது பதிவு தகவல்களில் ஏதாவது மாற்றம் இருப்பின் அதுகுறித்து உடனடியாகத் தகவல்தெரிவிக்க/மேற்சேர்க்கை செய்து, எல்லா நேரங்களிலும் நாளது வரையிலான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்கவும் நீங்கள் உறுதியளிக்கிறீர்கள், ஏனென்றால் இந்த நிறுவனம் மூலம் அல்லது நிறுவனத்தால் சேவைகள் மற்றும் துணைச் சேவைகள் வழங்குவதன் மீது அது நேரடித் தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. உங்களது அடையாளத்தை

மாற்றிக் கூறாதிருக்கவும், சட்டத்துக்குப் புறம்பான முறையில் இணையதளத்தை அணுகவும், சேவைகளைப் பயன்படுத்தவும் முயற்சிக்கமாட்டீர்கள் என்றும் நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கும் சேவைகளின் கொள்முதலுக்குக் கூடுதலான, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்.

## 5. வாடிக்கையாளரின் கவனத்துக்குரிய தேவைகள்

-

இணையதளம் மூலம் ஏதாவது நிதிசார்ந்த பரிவர்த்தனையை மேற்கொள்வதற்கு, எங்கள் நிறுவனமானது கிளையன்ட்/வாடிக்கையாளர் கவனத்துக்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம் மற்றும் வங்கிகள்/ நிதி நிறுவனங்களில் கடன்/கிரெடிட் கார்டு/ பரஸ்பர நிதி மற்றும் பிற நிதிசார் பொருள் தேவைகளுக்கான உங்கள் கோரிக்கைகளை ஏற்பாடு செய்யும் போது, பொருந்தும், பண மோசடி தடுப்புச் சட்ட (“PMLA”) விதிகளின்படி, கேஒய்சி-க்குத் தேவையான கட்டாயத் தகவல்களைக் கோரலாம் என்பதையும், ஒரு வாடிக்கையாளராக அதை நீங்கள் தரவேண்டும் என்பதையும், நீங்கள் ஏற்றுக்கொண்டு ஒப்புக்கொள்கிறீர்கள். தனக்கு அல்லது வங்கிகள்/ நிதி நிறுவனங்களுக்கு மனநிறைவளிக்கும் வகையில் ஒவ்வொரு புதிய வாடிக்கையாளர்/பயனரின் அடையாளத்தை நிரூபிப்பதற்காகவும், உங்களுக்கும், வங்கி/நிதி நிறுவனத்துக்கும் இடையிலான உறவு எத்தகைய இயல்புடையது என்பதை முடிவு செய்வதற்காகவும் எங்கள் நிறுவனம் போதிய தகவல்களைப் பெறக்கூடும். பொருந்தும் PMLA சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் வரும் தேவைகள் மற்றும் கடமைகளின்படி வாடிக்கையாளரின் கவனத்துக்குரிய தேவைகள் தொடர்பாக தனது மனநிறைவு ஏற்படுவதற்காக மேம்பட்ட, கவனத்துக்குரிய நடவடிக்கைகளை (ஏதாவது ஆவணப்படுத்தல் உள்பட) நிறுவனம் மேற்கொள்ள முடியும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டு, ஒப்புதலளிக்கிறீர்கள்.

## 6. தகுதி

-

நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகளைப் பெறும்போது, நீங்கள் ஒரு இந்தியாவில் வசிப்பவர் என்றும், 18 (பதினெட்டு) வயதுக்கு மேலானவர் என்றும், இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872-இன் கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் திறனுடையவர் என்று நீங்கள் அறிவித்து உறுதிப்படுத்துகிறீர்கள்.

**7. சமர்ப்பிக்கப்பட்ட உள்ளடக்கம்**

-

இணைய தளத்திலுள்ள ஏதாவது தரவு அல்லது தகவல்கள் உள்பட ஏதாவது உள்ளடக்கத்தைப் பகிர்வது அல்லது சமர்ப்பிப்பதன் மூலம், இணையதளத்தில் நீங்கள் இடுகையிடும் அனைத்து உள்ளடக்கத்துக்கும் நீங்களே முற்றிலும் பொறுப்பாவீர்கள் என்றும், இணையதளத்தில் அல்லது அதன் வழியாக நீங்கள் கிடைக்கச்செய்யும் எந்தவொரு உள்ளடக்கத்துக்கும் நிறுவனம் பொறுப்பாகாது என்றும் நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். அத்தகைய உள்ளடக்கமானது சேவை மற்றும் துணைச் சேவைகளில் (முழுமையாக அல்லது பகுதியாக அல்லது மாற்றியமைக்கப்பட்டு) நிறுவனத்தின் சொந்த விருப்பத்தின் பேரில் சேர்க்கப்படலாம். இணையதளத்தில் நீங்கள் சமர்ப்பிக்கும் அல்லது கிடைக்கச் செய்யும் அத்தகைய உள்ளடக்கம் தொடர்பாக, அத்தகைய பொருட்கள் அல்லது அத்தகைய உள்ளடக்கத்தின் ஏதாவது பகுதியைப் பயன்படுத்த, பிரதியெடுக்க, விநியோகிக்க, பொதுவில் காட்சிப்படுத்த, திருத்த, வழித்தோன்றல் படைப்புகளை உருவாக்க மற்றும் துணை உரிமம் வழங்குவதற்கு, நிறுவனத்துக்கு, திரும்பப்பெற முடியாத, நிறுத்த முடியாத, உலகளாவிய, ராயல்டி இல்லாத மற்றும் பிரத்யேகமற்ற உரிமையை நீங்கள் வழங்குகிறீர்கள். நீங்கள் சமர்ப்பிக்கும் உள்ளடக்கத்துக்கு நீங்களே முற்றிலும் பொறுப்பாவீர்கள் என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். இந்த இணையதளத்தில் அல்லது இதிலிருந்து பின்வருவதை நீங்கள் பதிவிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. (i) வெளியீடு மற்றும்/அல்லது தனியுரிமை உரிமைகள் அல்லது எந்தவொரு சட்டத்தையும் மீறும் ஏதாவது சட்டத்துக்குப் புறம்பான, அச்சுறுத்தும், அவதூறான, பழிப்புரையான, ஆபாசமான, பாலியல் தொடர்பான மற்றும் பிற பொருட்கள் அல்லது உள்ளடக்கம்; ii) ஏதாவது வணிகரீதியான பொருள் அல்லது உள்ளடக்கம் (இது நிதியைக் கோருதல், விளம்பரம் அல்லது எந்தவொரு பொருள் அல்லது சேவைகளையும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கு, ஆனால் அவை மட்டுமே இல்லை); (iii) எந்தவொரு பதிப்புரிமை, வணிக முத்திரை, காப்புரிமை அல்லது எந்தவொரு மூன்றாம் தரப்பினரின் தனிப்பட்ட உரிமையின் எல்லை மீறும், தவறாகப் பயன்படுத்தும் அல்லது மீறும் ஏதாவது பொருள் அல்லது உள்ளடக்கம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறுவதால் ஏற்படும் எந்தவொரு சேதத்துக்கும் அல்லது இந்த இணையதளத்தில் உள்ளடக்கத்தைப் பதிவிடுவதால் விளையும் வேறு எந்தத் தீங்குக்கும், நீங்களே முற்றிலும் பொறுப்பாவீர்கள்.

**8.மூன்றாம் தரப்பினர் இணைப்புகள்/சலுகைகள்**

-

இந்த இணையதளம் பிற இணையதளங்கள் அல்லது ஆதாரங்களுக்கான இணைப்புகளை வழங்கக்கூடும். அத்தகைய மூன்றாம் தரப்பினர் இணையதளங்கள் மற்றும் ஆதாரங்கள் மீது நிறுவனம் எவ்விதக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்காது என்பதால், அத்தகைய வெளிப்புற இணையதளங்கள் அல்லது ஆதாரங்கள் கிடைப்பதற்கு நிறுவனம் பொறுப்பாகாது என்றும், அத்தகைய இணையதளங்கள் அல்லது ஆதாரங்களில் உள்ள அல்லது அவற்றின் மூலம் கிடைக்கும் எந்தவொரு உள்ளடக்கம், விளம்பரம், தயாரிப்புகள் அல்லது பிறவற்றை நிறுவனம் வலியுறுத்துவது இல்லை என்பதுடன், அவற்றுக்குப் பொறுப்பாகாது என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டு, ஒப்புதலளிக்கிறீர்கள். மேலும், அத்தகைய ஏதாவது இணையதளம் அல்லது ஆதாரங்களில் உள்ள அல்லது அவற்றின் மூலம் கிடைக்கும் ஏதாவது உள்ளடக்கம், பொருட்கள் அல்லது சேவைகளைப் பயன்படுத்தல் அல்லது அவற்றைச் சார்ந்திருத்தல் காரணமாக ஏற்பட்ட அல்லது ஏற்பட்டதாகக் கூறப்படும் ஏதாவது சேதாரம் அல்லது இழப்புக்கு நிறுவனம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பொறுப்பாகாது, கடன்பொறுப்பு ஏற்காது என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டு, ஒப்புதலளிக்கிறீர்கள். இணையதளம் மூலம் அணுகப்படும் எந்தவொரு மூன்றாம் தரப்புடனான உங்களது தொடர்பில் ஏற்படும் எந்தவொரு அபாயத்துக்கும் நீங்களே பொறுப்பாவீர்கள் என்பதுடன், அத்தகைய மூன்றாம் தரப்பினரின் செயல்பாடுகள், விடுபடல்கள், பிழைகள், எடுத்துரைப்புகள், உத்தரவாதங்கள், மீறல்கள் அல்லது புறக்கணிப்புகளுக்கு அல்லது அந்த மூன்றாம் தரப்பினர் உடன் உங்களது இடைவினை காரணமாக ஏற்படும் ஏதாவது தனிப்பட்ட காயங்கள், மரணம், சொத்துக்கு ஏற்படும் சேதம் அல்லது பிற சேதங்கள் அல்லது செலவுகளுக்கு நிறுவனம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

**9. குழு காப்பீட்டுக் கொள்கை**

-

நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகளில் ஒரு பகுதியாக, வெவ்வேறு காப்பீட்டு நிறுவனங்களின் குழுக்காப்பீட்டை நிறுவனம் உங்களுக்கு வழங்கக்கூடும் என்பதையும், நீங்கள் நிறுவனத்தின் வாடிக்கையாளராக இருக்கும்பட்சத்தில் பைசாபஜார் மார்க்கெடிங் அண்டு கன்சல்டிங் பிரைவேட்

லிமிடெட் நிறுவனமே அதற்கு முதன்மை பாலிசிதாரராக ("MPH") இருக்கும் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள். அத்தகைய காப்பீடானது இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணைம் ("IRDAI") வழங்கிய விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகள், அதன் கட்டுப்பாடுகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும்.

**10. உத்தரவாதத்தின் பொறுப்புத்துறப்பு**

-

இந்த இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ள அல்லது இதிலிருந்து அணுகத்தக்க சேவைகள், துணைச் சேவைகள் மற்றும் அனைத்துத் தகவல்கள், தயாரிப்புகள், மற்ற சேவைகள் அல்லது பிற உள்ளடக்கங்கள் (மூன்றாம் தரப்பினருடையது உள்பட) ஆகியவற்றை நீங்கள் பயன்படுத்துவது உங்களது சொந்த அபாயத்திலானது என்பதை நீங்கள் வெளிப்படையாகப் புரிந்துகொள்கிறீர்கள். வழங்கப்படும் சேவைகள் “உள்ளது” “உள்ளபடியே” என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது. இணையதளத்தின் உள்ளடக்கம் அல்லது சேவைகள் (மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்கள் ஆதரவளித்தாலும், அளிக்காவிட்டாலும்) தொடர்பாக நிறுவனம் எவ்வித எடுத்துரைப்புகள், பொறுப்புறுதி அல்லது உத்தரவாதம் எதையும் நிறுவனம் முன்வைக்கவில்லை என்றும், குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை மீறாதிருத்தல் அல்லது அத்துடன் பொருந்துதல் குறித்த உத்தரவாதங்கள் எதற்கும் பொறுப்பேற்காது என்று வெளிப்படையாகக் கூறுகிறது.

இந்தச் சேவைகளில் சேர்க்கப்பட்டுள்ள அல்லது அதன் மூலம் அணுகக்கூடிய சேவைகள், துணைச் சேவைகள் மற்றும் அனைத்துத் தகவல்கள், பொருட்கள், சேவைகள் மற்றும் பிற உள்ளடக்கம் (மூன்றாம் தரப்புடையது உள்பட) தொடர்பான எவ்வகையான உத்தரவாதங்கள் அனைத்தையும் நிறுவனம் வெளிப்படையாக பொறுப்புத்துறக்கிறது, அவை, குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை மீறாதிருத்தல் அல்லது அத்துடன் பொருந்துதல், வணிகத்தன்மை குறித்த உள்ளார்ந்த உத்தரவாதங்களையும் உள்ளடக்கும்.

நிறுவனம் மற்றும் அதன் சேவை வழங்குனர்கள், துணை நிறுவனங்கள், தொழிற்கூட்டாளிகள் பின்வரும் உத்தரவாதம் எதையும் வழங்கவில்லை (i) சேவைகள் உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யும், (ii) சேவைகள் தடங்கலின்றி, சரியான நேரத்தில், பாதுகாப்பாக அல்லது பிழையின்றி இருக்கும் (iii) இந்தச் சேவைகளைப் பயன்படுத்திக் கிடைக்கக்கூடிய

முடிவுகள் துல்லியமாகவும், நம்பகமாகவும் இருக்கும் (iv) சேவைகள் மூலம் நீங்கள் வாங்கும் அல்லது பெறும் ஏதாவது பொருட்கள், சேவைகள், தகவல்கள் அல்லது பிற தயாரிப்புகளின் தரம் உங்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்யும், மற்றும் (v) தொழில்நுட்பத்தில் உள்ள ஏதாவது பிழைகள் சரி செய்யப்படும்.

எங்கள் இணையதளத்தில் கிடைக்கும் மற்றும் பரிந்துரை மூலம் இந்த TOUகள் ஆகியவற்றுக்குள் ஒருங்கிணைக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான விலை. விலைகள் அனைத்தும் இந்திய ரூபாயிலேயே தரப்பட்டுள்ளன, குறிப்பிட்டாலும், குறிப்பிடாவிட்டாலும். விலைகள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ஆகியவை நிறுவனத்தின் தொழிற்கூட்டாளிகளால் வழங்கப்படுகின்றன, அவை பிராண்டு வழிகாட்டல்கள் அல்லது பைசாபஜாரின் தொழிற்கூட்டாளிகள் ஒவ்வொருவருக்கும் பொருந்தக்கூடிய பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப மாறக்கூடும். சில நிகழ்வுகளில் சேவைகள் மற்றும் விலைகளை நிறுவனமே வழங்குகிறது, அத்தகைய சேவைகளின் பயன்பாடு மற்றும் விலைகளை மாற்றுவதற்கான உரிமை நிறுவனத்துக்கு உண்டு. ஒரு பரிவர்த்தனையைத் தொடங்குவதன் மூலம், பொருத்தமான சட்டங்களால் அனுமதிக்கப்பட்டு, நிறுவனத்தால் ஏற்கப்பட்ட கட்டண முறைகளைப் பயன்படுத்தி அந்தத் தயாரிப்புகளை வாங்குவதற்கு அல்லது சேவைகளைப் பெறுவதற்கு, இந்த நிறுவனங்களுடன், சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தும் மற்றும் செயல்படுத்தக்கூடிய ஒப்பந்தத்தில் நுழைகிறீர்கள் என்று நீங்கள் மேலும் உத்தரவாதமளிக்கிறீர்கள்.

இந்த நிறுவனம் பதிவு/உறுப்பான்மை அல்லது இணையத்தில் உலாவுவதற்காகக் கட்டணம் எதையும் விதிப்பதில்லை. இருப்பினும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும், பதிவு/உறுப்பான்மை அல்லது இணையத்தில் உலாவுவதற்கான கட்டணத்தை விதிப்பதற்கான முழுமையான உரிமை நிறுவனத்துக்கு இருக்கிறது. நிறுவனம் விதிக்கக்கூடிய அத்தகைய கட்டணங்கள் அனைத்தும் பயனர்களுக்குத் தெரிவிக்கப்படுவதுடன், அத்தகைய மாற்றம் குறித்து இணையதளத்தில் பதிவிட்டவுடன் அது தானாகவே நடைமுறைக்கு வரும். அவ்வாறு நிறுவனம் விதிக்கும் கட்டணம் அனைத்தும் இந்திய ரூபாயிலேயே இருக்கும் இணையதளத்தை நீங்கள் தொடர்ந்து பயன்படுத்துவது TOUஇன் திருந்திய விதிமுறைகளை நீங்கள் ஏற்பதாகக் கருதப்படும்.

நிகழ்வுக்கு ஏற்றவாறு, உங்களுக்கு, பைசாபஜார் மற்றும் அதன் தொழிற்கூட்டாளிகளுக்கு இடையில் கட்டணம் செலுத்தலை

வசதிப்படுத்துவதற்காக, கட்டண வசூல், திருப்பித்தருதல் மற்றும் செலுத்தும் தொகை ஆகியவற்றுக்காக இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு கட்டணம் வசூலிப்பவர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் இந்த நிறுவனமானது ஒப்பந்தத்தை மேற்கொள்ளலாம். நீங்கள் செலுத்திய கட்டணங்களைச் செலுத்துவதை நிறுவனம் தொடங்கவேண்டும் என்பதுடன், பரிவர்த்தனையை நிறைவுசெய்யும் தேதியானது பொருட்கள் உங்களுக்கு வழங்கப்பட்டபிறகு அல்லது சேவைகள் உங்களுக்கு வழங்கப்பட்ட பிறகு, மற்றும் நிகழ்வுக்கு ஏற்றவாறு இணையதளம் மற்றும் அதன் தொழிற்கூட்டாளிகளுக்கு இடையில் ஒப்புக்கொள்ளப்பட்டவாறு பிற கூடுதல் நேரமாக இருக்கலாம்.

இணையதளத்தில் கிடைக்கும் ஏதாவது ஒரு கட்டண முறை/களைப் பயன்படுத்தும்போது, பின்வருவனவற்றின் காரணமாக உங்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதத்துக்கும் நிறுவனம் பொறுப்பேற்காது அல்லது கடன்பொறுப்பு கொண்டிருக்காது:

1. ஏதாவது பரிவர்த்தனை/களுக்கு அங்கீகாரம் இல்லாதிருப்பது, அல்லது
2. பரிவர்த்தனையின் காரணமாக ஏற்படும் ஏதாவது பணம் செலுத்தல் பிரச்சினைகள் அல்லது
3. உங்களால் பயன்படுத்தப்படும் முறைகள் கட்டண முறைகள் சட்டவிரோதமாக இருப்பது (கிரெடிட்/டெபிட் கார்டு மோசடிகள் மற்றும் பிற);
4. ஏதாவது காரணத்தால்(ங்களால்) பரிவர்த்தனை மறுக்கப்படுவது

இங்குள்ள எதையும் கருத்தில்கொள்ளாமல், உங்களுடைய/உங்களுடைய பரிவர்த்தனையின் நம்பகத்தன்மை குறித்து இணையதளத்துக்கு மனநிறைவு ஏற்படவில்லை என்றால், பாதுகாப்பு அல்லது பிற காரணங்களுக்காகக் கூடுதல் சரிபார்ப்பை மேற்கொள்ளும் உரிமை அதற்கு உண்டு.

இணையதளம் வழங்கும் கட்டண வசதிகளைப் பயன்படுத்துவதால், இந்த இணையதளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கப்படாமை, பெறப்படாமை, கட்டணம் செலுத்தாமை, சேதம், எடுத்துரைப்புகள் மற்றும் உத்தரவாதங்கள் மீறப்படுவது, விற்பனைக்குப் பிந்தைய அல்லது வாரண்டி சேவைகளை வழங்காதிருப்பது அல்லது

மோசடி ஆகியவற்றுக்கு இந்த இணையதளத்தைக் கடப்பாடு கொண்டிருப்பதாக அல்லது பொறுப்புடையதாக ஆக்காது. ஒரு பரிவர்த்தனை செயலாக்கம் செய்யப்படாத காரணத்தால் ஏற்படும் ஏதாவது சேதங்கள், உரிமைகள் அல்லது கோரிக்கைகளுக்கு இந்த இணையதளம் பொறுப்பாகாது.

இணையதளத்தில் அல்லது இணையதளம் மூலம் ஏதாவது சேவை அல்லது பொருளை வாங்குவதற்கு கிரெடிட்/டெபிட் கார்டு போன்றவை தொடர்பான துல்லியமான தகவல்களை வழங்க நீங்கள் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறீர்கள். நீங்கள் சட்டபூர்வமற்ற முறையில் உங்களுக்கு உரிமையான கட்டணத் தகவல்கள் அல்லது முறையை நீங்கள் பயன்படுத்தமாட்டீர்கள் என்றும் நீங்கள் மேலும் உத்தரவாதமளிக்கிறீர்கள். இந்த TOUகளுடன் கூடுதலாக, வங்கி மற்றும் பிற நிதி நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் ஒவ்வொரு பயனருக்கும் பொருந்தும். அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் கட்டணம் செலுத்தலை மறுப்பதால் ஏற்படும் எந்தவொரு கடன்பொறுப்பையும் இந்த இணையதளம் துறக்கிறது.

நிதிசார் பொருளை வைத்திருக்கும் ஒரு தனி நபர், பொருட்கள் அல்லது சேவைகளுக்குக் கட்டணம் செலுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை மீது பைசாபஜார் தனது சொந்த விருப்பத்தின்பேரில் கட்டுப்பாடுகளை விதிக்கலாம். கூடுதலாக, அத்தகைய எண்ணிக்கைக் கட்டுப்பாட்டை மீறும் பரிவர்த்தனைகள் மற்றும் சந்தேகத்துக்குரிய வகையில் உங்களுக்கு தொகைகள் மற்றும் கட்டணங்களை ஏற்படுத்திய பரிவர்த்தனைகளை செயலாக்கம் செய்வதை மறுப்பதற்கான உரிமையை இந்த இணையதளம் பெற்றுள்ளது.

பைசாபஜார், தானியங்கு ஆன்லைன் மின்னணு கட்டணம் செலுத்தல்கள் மூலமாக (தன் மூலமாகவே அல்லது தனது பேமெண்ட் கேட்வே சேவை வழங்குனர்கள் மூலம்), கேஷ் ஆன் டெலிவரி, சேகரிப்பு மற்றும் பணம் அனுப்புதல் வசதி மூலம், தற்போதுள்ள அங்கீகரிக்கப்பட்ட வங்கிச் செயல்பாட்டுக் கட்டமைப்பு மற்றும் கிரெடிட் கார்டு பேமெண்ட் கேட்வே வலைப்பின்னல்கள் (இணையதளத்துடையது அல்லது சேவை வழங்குனருடையது) ஆகியவற்றைப் பயன்படுத்தி பயனர் வாங்கும் பொருட்களுக்கு கட்டணம் செலுத்துவதற்கான கட்டண சேனல்களை வழங்கும் ஒரு ஏதுவாளர் மட்டுமேயாகும்.

பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதில் தோல்வி அல்லது காலதாமதம் ஏற்பட்டு, அதனால் உங்களுக்கு ஏதாவது சேதம் அல்லது இழப்புக்கு பைசாபஜார் பொறுப்பாகாது மற்றும் எவ்வித கடன்பொறுப்பையும் ஏற்காது. இந்தியாவின் பிராந்திய எல்லைக்கு வெளியே பொருட்கள்/சேவைகள் எதுவும் வழங்கப்படாது.

**11. கடன்பொறுப்பின் வரம்பு**

-

லாபம், வாய்ப்பு, நல்லெண்ணம், பயன்பாடு, தரவு அல்லது கண்ணுக்குத் தெரியாத பிற இழப்புகள் உள்ளிட்ட ஆனால் இவை மட்டுமே அல்லாத எந்தவொரு நேரடியான, மறைமுகமான, தற்செயலான, சிறப்பு, விளைவு அல்லது முன்மாதிரியான இழப்புகளுக்கு இந்த நிறுவனம் (அதன் துணை நிறுவனங்கள், இயக்குனர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் வழங்குனர்கள் ஆகியோர் உட்பட) கடன் பொறுப்பு கொண்டிருக்காது என்பதை நீங்கள் வெளிப்படையாகப் புரிந்துகொண்டு, ஒப்புக்கொள்கிறீர்கள், பின்வருவன காரணமாக அத்தகைய சேதங்களுக்கான சாத்தியம் குறித்து நிறுவனத்துக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தாலும்கூட (i) ஏதாவது தோல்வி அல்லது இழப்பு (இந்த இணையதளத்தின் எந்தவொரு பயன்பாட்டையும் வரம்பற்ற முறையில் பயன்படுத்தல் அல்லது பயன்படுத்த இயலாமை உள்பட), அல்லது (ii) இந்த இணையதளம் அல்லது உள்ளடக்கத்தின் ஏதாவது பயன்பாடு (iii) எங்களது அல்லது ஏதாவது வழங்குனரின் செயல்பாடு அல்லது செயல்படாமை, அத்தகைய தரப்பு அல்லது வேறு ஏதாவது தரப்புக்கு சேதத்துக்கான சாத்தியம் குறித்து அல்லது (b) இந்த இணைய தளத்தை அணுகுவதால் அல்லது இணையதளத்திலிருந்து ஏதாவது உள்ளடக்கத்தைப் பதிவிறக்கம் செய்வதால், உங்கள் கணிணி அல்லது பிற உடைமைக்கு ஏற்படும் ஏதாவது சேதம் அல்லது அதைத் தாக்கும் வைரஸ்கள் குறித்து எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தாலும்

மேற்கூறியவற்றைப் பொருட்படுத்தாமல், மேலே விளக்கப்பட்ட ஏதாவது நிகழ்வுகளுடனான தொடர்பு அல்லது அதன் காரணமாக ஏற்பட்டதாக நிரூபிக்கப்பட்ட உண்மையான இழப்பு அல்லது சேதத்துக்கு நிறுவனத்துக்குக் கடன்பொறுப்பு இருப்பதாக அறியப்பட்டால், நிறுவனத்தின் கடன்பொறுப்பானது, பொருத்தமாக இருப்பின், இணையதளத்தில் அத்தகைய பரிவர்த்தனை(கள்)/சேவைகள் தொடர்பாக ஒட்டுமொத்தமாக

நீங்கள் செலுத்திய ஏதாவது சேவை/பரிவர்த்தனைக் கட்டணத்துக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்படும் என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.

இந்த இணையதளம் மூலம் உங்களுக்கு வழங்கபடக்கூடிய மூன்றாம் தரப்பினர் இணையதளங்கள் மீது இந்த நிறுவனத்துக்கு எந்தக் கட்டுப்பாடும் கொண்டிருக்காது. ஏதாவது ஒரு மூன்றாம் தரப்பு சேவை வழங்குனரால் தரப்படும் அல்லது வழங்கப்படும் சேவைகளை நீங்கள் பயன்படுத்துவதற்கு இந்த நிறுவனம் எந்தச் சூழ்நிலையிலும் பொறுப்புக்கொண்டிருக்காது.

**12. ஈட்டுறுதி**

-

இந்த TOUஐ நீங்கள் அத்துமீறுவது, மூன்றாம் தரப்பு ஒருவரின் ஏதாவது சட்டங்கள் அல்லது உரிமைகளை நீங்கள் மீறுவது அல்லது இந்த இணையதளத்தை நீங்கள் பயன்படுத்துவது ஆகியவை காரணமாக நிறுவனத்துக்கு ஏற்படும் ஏதாவது இழப்புக் கோரிக்கைகள், செயலின் விளைவு, கோரிக்கைகள், மீட்புகள், இழப்புகள், சேதங்கள், அபராதங்கள், தண்டனைகள் அல்லது நியாயமான வழக்கறிஞர் கட்டணம் உள்பட எந்தவொரு இயல்பு அல்லது வகையிலான ஏதாவது செலவு அல்லது செலவினங்கள் ஆகியவற்றிலிருந்து அல்லது அதற்கு எதிராக நிறுவனத்துக்கு (மற்றும் அதன் துணை நிறுவனங்கள், அலுவலர்கள், இயக்குனர்கள், முகவர்கள் மற்றும் பணியாளர்கள்) எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமல் ஈட்டுறுதி வழங்க நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.

சேவைகள் தொடர்பாக, விடுவிப்புக்கு எதிராக, சட்டப்படி அல்லது நேர்மையாக எதுவாக இருந்தாலும், தெரிந்ததாகவோ, தெரியாததாகவோ, நீங்கள் கொண்டிருந்த, தற்போது கொண்டிருக்கும், அல்லது எதிர்காலத்தில் கொண்டிருக்கக்கூடிய, ஏதாவது அல்லது அனைத்து விதமான கடன் பொறுப்புகள், இழப்புக் கோரிக்கைகள், கோரிக்கைகள், இழப்புகள், வழக்குகள், செலவுகள் மற்றும் செலவீனங்கள் ( நீதிமன்றச் செலவுகள் மற்றும் நியாயமான வழக்கறிஞர் கட்டணம் உள்பட) ("இழப்புகள்") ஆகியவற்றிலிருந்து நிறுவனம், அதன் அலுவலர்கள், இயக்குனர்கள், பணியாளர்கள், முகவர்கள், உரிமதாரர்கள், துணை நிறுவனங்கள், வாரிசுகள் மற்றும் நியமிக்கப்பட்டவர்கள் ஆகியோர் மீது நீங்கள் வழக்குத்தொடுக்க, இல்லையெனில் ஏதாவது கோரிக்கை அல்லது இழப்புக் கோரிக்கையை முன்வைக்க மற்றும் மாற்றமுடியாமல், நிபந்தனையின்றி

மற்றும் முற்றிலும், முழுமையாக அல்லது தனித்தனியாக விடுவிக்க, தள்ளுபடிசெய்ய அல்லது எக்காலத்துக்கும் நீங்கள் விடுவிக்கக்கூடாது.

**13. கூடுதல் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

-

இணையதளம், தொடர்புடைய கொள்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள், இந்த TOU மற்றும் தனியுரிமைக் கொள்கைக்கு, அது பொருத்தமானது மற்றும் சரியானது என்று கருதுமாறு எந்த நேரத்திலும் மாற்றங்களை மேற்கொள்வதற்கான உரிமையை நிறுவனம் பெற்றுள்ளது, இது சட்டம் அல்லது ஒழுங்குமுறையில் ஏற்படும் மாற்றங்களுடன் இணங்குதல், தவறுகள், விடுபட்டவை, பிழைகள் அல்லது தெளிவின்மைகளைத் திருத்துதல், செயல்முறை பாய்வில் மாற்றங்களைப் பிரதிபலித்தல், சேவைகள் மற்றும் துணைச் சேவைகளின் நோக்கம் மற்றும் தன்மைகள், நிறுவன மறுஅமைப்பு, சந்தை நடைமுறை அல்லது வாடிக்கையாளர் தேவைகள் ஆகியவை உள்பட ஆனால் இவை மட்டுமே இல்லை. எந்தவொரு மாற்றத்துக்கும், மேற்சேர்க்கை செய்யப்பட்ட விதிமுறைகளை இணையதளத்தில் அல்லது பிற வழிகளில் நிறுவனம் அறிவிக்கும். இந்தச் சேவைகள் மற்றும் துணைச் சேவைகளை நீங்கள் தொடர்ந்து பயன்படுத்துவது, மாற்றங்களை ஏற்றதுடன், திருத்தப்பட்ட விதிமுறைகளால் கட்டுப்படுத்தப்படுவதற்கான ஒரு ஒப்பந்தத்தை குறிக்கிறது. இந்த மாற்றங்களை நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், இந்தச் சேவைகள் மற்றும் துணைச் சேவைகளை நீங்கள் பயன்படுத்துவதைத் தயவுசெய்து நிறுத்திவிடவும்.

துணைச் சேவைகள் உள்ளிட்ட சேவைகளை, சிறந்த முயற்சியின் அடிப்படையில், நியாயமான கால அவகாசம் வழங்குவதன் மூலம், தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக, நிறுத்திவைக்க அல்லது இடை நிறுத்துவதற்கான உரிமையை நிறுவனம் பெற்றுள்ளது, அது சேவைகள் மற்றும்/அல்லது இணையதளம் அல்லது சேவைகளின் பாதுகாப்பு மற்றும் கட்டுறுதியைப் பேணுவதற்காகச் சில அம்சங்கள்/உள்ளடக்கங்களை வெறுமனே மாற்றுவதற்காக இல்லாதிருக்கும் வரை. சேவைகளின் ஏதாவது மாற்றம் அல்லது இடை நிறுத்தத்துக்காக நிறுவனம் எவ்விதத்திலும் உங்களுக்குப் பொறுப்பாகாது என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.

இந்தச் சேவைகள் மற்றும் துணைச் சேவைகளை, சட்டத்துக்குப் புறம்பான நோக்கங்களுக்காக அல்லது சட்டவிரோதமான, துன்புறுத்தல், அவதூறான (பொய்யான மற்றும் பிறருக்குத் தீங்கு விளைவிக்கும்), மற்றவருடைய அந்தரங்கத்தில் தலையிடும், துஷ்பிரயோகமான, அச்சுறுத்தலான அல்லது ஆபாசமான அல்லது மற்றவர்களுடைய உரிமைகளை மீறும் நோக்கங்களுக்காகப் பொருள் பரிமாற்றத்துக்காகப் பயன்படுத்தாதிருக்க நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.

தனது இணையதளம் மற்றும்/அல்லது சேவைகள்/துணைச் சேவைகளை விளம்பரப்படுத்தும் நோக்கில், நிறுவனம் அவ்வப்போது சில சலுகைகளை அறிவிக்கலாம் ("ஊக்குவிப்புச் சலுகை/கள்"). இந்த ஊக்குவிப்புச் சலுகைகள் எப்பொழுதும், இந்த TOUஆல் மற்றும் கூடுதலான சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பரிந்துரைக்கப்பட்டிருப்பின், அவற்றால் கட்டுப்படுத்தப்படும். அந்தக் கூடுதல் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், தொடர்புடைய அந்த ஊக்குவிப்புச் சலுகைக்கானதாக மட்டுமே இருக்கும் என்பதுடன், இந்த விதிமுறைகளுடன் முரண்படும் அளவுக்கு அவை இந்த TOUஐ விட அதிகாரமுடையதாக இருக்கும். தனது சொந்த விருப்பத்தின்படி, இந்த ஊக்குவிப்புச் சலுகை(கள்) மற்றும் அவற்றை நிர்வகிக்கும் விதிமுறைகளைத் திரும்பபெறுவதற்கு, இடையில் நிறுத்துவதற்கு, திருத்துவதற்கு, நீடிப்பதற்கு மற்றும் நீக்கம் செய்வதற்கான உரிமைகளைப் பெற்றுள்ளது.

**14. பொதுவானவை**

-

இந்த விதிமுறைகளில் ஏதாவது செல்லுபடியாகாது, பயனற்றது என்று கருதப்பட்டால் அல்லது செயல்படுத்தமுடியாத ஏதாவது காரணத்துக்காக, இந்த விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தரப்பினரின் நோக்கங்களை நடைமுறைப்படுத்த நீதிமன்றம் முயற்சிக்க வேண்டும் என்றும் செயல்படுத்த முடியாத நிபந்தனை, பிரிக்கக்கூடியது என்று கருதப்பட வேண்டும், மற்றும் மீதமுள்ள நிபந்தனையை செயல்படுத்துவதை அல்லது அதன் செல்லுபடித்தன்மையைப் பாதிக்காது என்று தரப்பினர் ஒப்புக்கொள்கிறார்கள். தலைப்புகள் மேற்கோள் நோக்கங்களுக்காக மட்டுமே தரப்பட்டுள்ளதோடு, அத்தகைய பிரிவின் நோக்கம் மற்றும் அளவைக் கட்டுப்படுத்தாது. இந்த TOU மற்றும் உங்களுக்கும், நிறுவனத்துக்கும் இடையிலான உறவு, இந்தியச் சட்டங்களால்

கட்டுப்படுத்தப்படும். மீறல் அல்லது அதன் முடிவு உள்பட, இந்த ஒப்பந்தத்தால் அல்லது அது தொடர்பாக ஏற்படும் ஏதாவது தகராறு, சர்ச்சை அல்லது இழப்புக் கோரிக்கையானது, நடுவர் மற்றும் சமரசச் சட்டம் 1996ன் பிரிவுகள் அல்லது அதன் திருத்தங்களுக்கு ஏற்ப நியமிக்கப்பட்ட ஒரு நடுவரால் தீர்ப்பளிக்கப்படும். ஒரு நடுவர் மூலம் ஒரு ஒப்பந்தத்தை எட்ட நம்மால் முடியாத நிகழ்வில், மூன்று நடுவர்களை நியமிக்க நாம் ஒப்புக்கொள்கிறோம், இதில் நாம் ஒவ்வொருவரும் ஒரு நடுவரை நியமித்து, அந்த இரண்டு நடுவர்களும் சேர்ந்து மூன்றாவது நடுவரை நியமிப்பார்கள். அந்த நடுவர் மன்றத்துக்கான இடம் குருகிராம் ஆக இருக்கும். நடுவர் செயல்முறைகள் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு, ஏதாவது ஆணை அல்லது ஆணைகள் வழங்கப்பட்டால் அது ஆங்கிலத்தில் இருக்கும். இந்த நிபந்தனைகளின் அனைத்து விதிமுறைகளையும் உறுதிப்படுத்தாத நாடுகள் அல்லது நீதிமன்ற வரம்புகளில் தனது ஏதாவது சேவைகளை நீங்கள் பயன்படுத்துவதை இந்த நீதிமன்றம் குறிப்பாகத் தடை செய்கிறது. இந்த இணையதளம், குறிப்பாக இந்தியப் பிராந்தியத்துக்குள் உள்ள பயனர்களுக்கானது. ஒருவேளை, நீதித்துறை சார்ந்த அல்லது நீதித்துறை சாராத, ஏதாவது சிக்கல் ஏற்படும்பட்சத்தில், அது பிரத்யேகமாக குருகிராம் நீதிமன்றங்களின் அதிகாரவரம்புக்குட்பட்டு, இந்தியச் சட்டங்களுக்கு உட்படுத்தப்படும். நீங்களோ, மற்றவர்களோ ஒருமுறை சட்டமீறலை மேற்கொள்ளும்போது, நிறுவனம் நடவடிக்கை எடுக்கத்தவறினால், தொடர்ந்துவரும், அதுபோன்ற மீறல்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நிறுவனத்தின் உரிமையை விட்டுக்கொடுப்பதாக அமையாது. இந்த TOU உங்களுக்கும், நிறுவனத்துக்கும் இடையிலான முழுமையான ஒப்பந்தமாக அமைவதுடன், இந்த இணையதளம் தொடர்பாக உங்களுக்கும், நிறுவனத்துக்கும் இடையிலான முந்தைய ஒப்பந்தங்கள் எதையும் ஒதுக்குவதாக அமையும்.

PaisaBazaar.com
பிளாட் எண். 135,
செக்டார்-44, குர்கான்-122001,
ஹரியானா
தொலைபேசி - 0124 - 4562900
தொலைநகலி - 0124 - 4562902
மின்னஞ்சல் : **care@paisabazaar.com.**

எங்களது தனியுரிமைக் கொள்கை தொடர்பாகக் கேள்விகள், கவலைகள் அல்லது ஆலோசனைகள் உங்களுக்கு இருந்தால், எங்களைத் தொடர்புகொள்க பக்கத்தில் உள்ள தொடர்புத் தகவல்களைப் பயன்படுத்தி அல்லது **care@paisabazaar.com** என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்ள முடியும்

கடைசியாக மேற்சேர்க்கை செய்யப்பட்டது - **06/11/2019**